**பதிவஞ்சல் / மிக மிக அவசரம்/தனிக்கவனம்**

| | |
|---|---|
| விடுநர் | பெறுநர் |
| திருமதி.ஆர்.ஹேமலதா, எம்.ஏ., | முதன்மைக் கல்வி அலுவலலர், |
| மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் | சென்னை பெண்கள் மாகாண |
| பழங்குடியினர் நல அலுவலர், | மேல்நிலைப்பள்ளி வளாகம், |
| சென்னை -01. | எழும்பூர், சென்னை - 08. |

ந.க.எண். ய11 /1766/2022 நாள்:20.12.2022

அய்யா / அம்மையீர்,

பொருள்: ஆதிதிராவிடர் நலம் – கல்வி உதவித்தொகை – பிரிமெட்ரிக் (IX-X) மற்றும் சுகாதார தொழில்புரிவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை திட்டம் (I-X) ஒரே கல்வி உதவித்தொகை திட்டமாக நடைமுறைப்படுத்துதுல் – தொடர்பாக.

பார்வை: சென்னை ஆதிதிராவிடர் நல ஆணையரக கடித ந.க.எண். ஜே2 /8246 /2022, நாள்:29.11.2022.

=======

பார்வையில் கண்டுள்ள கடிதத்தில் 2022-23 ஆம் கல்வியாண்டிற்கு போஸ்ட் மெட்ரிக், ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தினை நடைமுறைபடுத்த கீழ்கண்ட கூடுதல் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

1. 2022-23 ஆம் கல்வியாண்டிற்கு போஸ்ட் மெட்ரிக் , ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்க மாணாக்கர்களுக்கு ஆதார் எண் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. **மேலும் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கி கணக்கிற்கே கல்வி உதவித்தொகை வழங்கப்படும் (Aadhar based payment) என தெரிவிக்கப்பட்டுள்ளது.** ஆகவே அனைத்து மாணாக்கர்களுக்கும் அவர்தம் ஆதார் எண்ணை வங்கி கணக்குடன் (Aadhar seeding) இணைக்க அனைத்து பள்ளிகளுக்கும் அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
2. மாணாக்கர்கள் வங்கி கணக்குடன் ஆதார் எண்ணினை இணைப்பதற்கு மாணாக்கர் வங்கி கணக்கு வைத்திருக்கும் வங்கியினை தொடர்பு கொண்டு, அங்கு வழங்கப்படும் படிவத்தினை (Aadhar seeding form) பூர்த்தி செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3. மாணாக்கர்களுக்கு ஆதார் எண்ணை வங்கி கணக்குடன் இணைக்க பள்ளிகளில் நியமிக்கப்பட்டுள்ள தொடர்பு/பற்று அலுவலர்கள் உரிய வழிகாட்டுதல்களை மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.

4. இறுதியாக ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கி கணக்கிற்கே கல்வி உதவித்தொகை வரவு வைக்கப்படும். ஆகவே மாணவர்களால் ஒன்றுக்கு மேற்பட்ட வங்கி கணக்குகள் பராமரிக்கப்படின் எந்த வங்கி கணக்குடன் ஆதார் எண் இணைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

5. ஒன்றுக்கு மேற்பட்ட வங்கி கணக்குகள் பராமரிக்கப்படும் மாணாக்கர்களுக்கு நடப்பில் செயல்பாட்டில் உள்ள மாணவர் பெயரிலான வங்கி கணக்கினை ஆதார் எண்ணுடன் இணைக்க அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

6. ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கி கணக்கிற்கே கல்வி உதவித்தொகை வழங்கப்படும் என்பதால் மாணாக்கர்களிடமிருந்து வங்கி கணக்கு எண் இணையதளத்தில் பெறப்படாது. ஆதார் எண் மட்டுமே உள்ளீடு செய்யப்பட வேண்டும்.

7. ஆதார் எண் சரிபார்க்கப்படுவதால், ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட தொலைபேசி எண்ணிற்கு One Time Password (OTP) அனுப்பப்படும். எனவே ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட தொலைபேசி எண் பயன்பாட்டில் உள்ளதுதானா என்பதை மாணவர்கள் உறுதி செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

8. 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கான ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க வருமான சான்றிதழ், சாதிச் சான்றிதழ் இணைய வழியில் பெறப்பட்டதாக இருக்க வேண்டும்.

9. சுகாதாரமற்ற தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கான உதவித்தொகை திட்டத்திற்கு, மாணாக்கர்களின் பெற்றோரில் யாரேனும் ஒருவர் சுகாதாரமற்ற தொழில் புரிவோராக இருக்க வேண்டும்.

10. சுகாதாரமற்ற தொழில் புரிவதற்கான சான்றினை கிராமப்புறங்களில் கிராம நிர்வாக அலுவலர்/ஊராட்சி மன்ற தலைவரிடமும், நகர்புறங்களில் சான்றிதழ் வழங்கும் நிலையில் உள்ள நகராட்சி/ மாநகராட்சி சுகாதார ஆய்வாளர்களிடமும் பெற்றிருக்க வேண்டும்.

11. சுகாதாரமற்ற தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கான உதவித்தொகை திட்டத்திற்கு விண்ணப்பிக்கும் போது சுகாதாரமற்ற தொழில் புரிவதற்கான சான்றினை மாணாக்கர்கள் கட்டாயம் இணையத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

12. பள்ளிகளுக்கான பயனர் பெயர் (USER NAME), கடவுச்சொல் (PASSWORD) பள்ளிகளின் UDISE எண்ணினை வைத்தே வழங்கப்படும் என்பதால் EMIS தரவு தளத்தில் தங்கள் பள்ளிகள் சார்ந்த விவரங்களில் தொலைபேசி எண், மின்னஞ்சல் பயன்பாட்டில் உள்ளதுதானா என்பதை அனைத்து பள்ளி தலைமையாசிரியர்களும் சரிபார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

13. 2022-23 ஆம் கல்வியாண்டு முதல் பிரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் மற்றும் சுகாதார தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கான திட்டம் இரண்டு திட்டங்களும் ஒரே திட்டமாக இணைய வழியிலேயே நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

14. இத்திட்டங்கள் 60:40 என்ற விகிதத்தில் செயல்படுத்தப்படும் நிலையில் , ஒன்றிய அரசின் பங்கு 60% மாணாக்கர்களின் ஆதார் எண்ணுடன் இணைத்த வங்கி கணக்கிற்கே நேரிடையாக வரவு வைக்கப்படும் என்பதால் மாணாக்கர்கள் ஆதார் எண்ணுடன் வங்கி கணக்கிணை இணைப்பது அவசியமானது.

15. மேலும் 2022-23 ஆம் ஆண்டிற்கான இணையதளம் விரைவில் திறக்கப்பட உள்ளதால், இத்திட்டத்தினை இக்கல்வியாண்டில் சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு மேற்கண்ட அறிவுரைகளை மாணாக்கர்களுக்கு விரைந்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சென்னை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்களைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
சென்னை-01.

20/12/2022

நகல்

1. இயக்குநர்,
ஆதிதிராவிடர் நல இயக்குநரகம்,
சேப்பாக்கம், சென்னை – 05 – தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.
2. கல்வி அலுவலர்,
3rd தளம், அம்மா மாளிகை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் கட்டிடம், சென்னை – 03 (தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது).
3. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை),
சென்னை (தெற்கு),
சைதாப்பேட்டை,
சென்னை – 600 015 (தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது).
4. மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலை)
சென்னை (வடக்கு),
வில்லிவாக்கம்,
சென்னை – 49(தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது).